# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**_2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி_**

*(2022.04.25 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


## ஜயமக அபிவிருத்தி, சமூக சேவைகள், அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்)

*(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)*

**ஜயமக அபிவிருத்தி, சமூக சேவைகள், அறக்கட்டளை மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*புத்தளம் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஹெக்டர் அப்புஹாமி அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*ஜயமக அபிவிருத்தி, சமூக சேவைகள், அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்)*

**ஜயமக அபிவிருத்தி, சமூக சேவைகள், அறக்கட்டளை மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

*முன்னுரை*

"ஜயமக அபிவிருத்தி, சமூக சேவைகள், அறக்கட்டளை மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக் கிணங்க சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னால் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எந்தப் பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், சொல்லப்பட்ட அவ்விண்ணப் பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்கு மாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்*

**1**. இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, ஜயமக அபிவிருத்தி, சமூக சேவைகள், அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*ஜயமக அபிவிருத்தி, சமூக சேவைகள், அறக்கட்டளை மன்றத்தைக் கூட்டிணைத்தல்*

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஜயமக அபிவிருத்தி, சமூக சேவைகள், அறக்கட்டளை மன்றத் தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ளவர் அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப் பினர்களாக, இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோ ரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாப னம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "ஜயமக அபிவிருத்தி, சமூக

சேவைகள், அறக்கட்டளை மன்றம்'' என்னும் மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் அது பொது இலச்சினை யொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பி யாங்கு அதனை மாற்றவும் முழுத் தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்

**3**. கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) சிரேஷ்ட பிரசைகளின் இயக்கங்களினால் ஆற்றப்படும் சேவைகளுக்கு ஆதரவளித்தலும் ஊக்கமளித்தலும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதில் ஈடுபட்டுள்ள எவரேனும் உறுப்பினருக்கு, அலுவலருக்கு அல்லது சேவையாளருக்குப் புலமைப் பரிசில் என்ற வகையில் உதவியளித்தல் ;

(இ) இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயும் உள்ள ஒத்த கழகங்களுடன் புரிந்துணர்வையும், ஒத்துழைப்பையும், நற்புறவையும் மேம்படுத்துதல் ;

(ஈ) சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களை ஒன்றிணைத்து அவர்களது எதிர்கால முன்னேற்றத்திற்காக செயற்படுதல் ;

(உ) சிறுவர் மற்றும் மகளிர் மேம்பாட்டுக்கான சமூக வேலைத்திட்டங்களை உருவாக்கி அதனை அமுல் படுத்த உதவுவதும் அதற்கான கல்வி மற்றும் பயிற்சிக் கருத்திட்டங்களை அமுலாக்கல் ;

(ஊ) உயர்கல்விக்கான வாய்ப்பினை எட்டாத இளைஞர், யுவதிகளுக்குப் பொறியியல்துறை, கைத்தொழில்துறை, தச்சுத்தொழில், வாகன ஓட்டுநர், கணனித்தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் தொழில்சார் பயிற்சிகளை வழங்குவதும் அவர்களை அவ்வாறான தொழில்களில் ஈடுபடுத்துவது மற்றும் அவசியமான தொழில்கற்கை நிலையங்களை ஆரம்பித்தல் ; அத்துடன்

(எ) மேற்படி குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான வையும் அதன் இடைநேர்விளைவானவையும் அல்லது அதற்கு உகந்தவையுமான அத்தகைய மற்றெல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்

**4**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களுட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்:-

(அ) நிதிகளைத் திரட்டுவதற்கும், காசாக அல்லது பொருளாக மானியக் கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுவதற்கும் ;

(ஆ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எத்தகைகயதுமான எம்முறையிலும் கொள்ளுவதற்கும், வைத்திருப்பதற்கும், குத்தகைக்கு அல்லது கேள்வுக்கு எடுப்பதற்கும் அல்லது கொடுப்பதற்கும், வாடகைக்கு விடுவதற்கும், விற்பதற்கும் அல்லது வேறுவகையாகக் கையுதிர்ப்பதற்கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொழிலுக்கு அவசியமான அல்லது வசதியான எவையேனும் கட்டிடங்களை அல்லது கட்டுவேலைகளை நிர்மாணிப்பதற்கும், பேணுவதற்கும், மாற்றுவதற்கும் ;

(இ) நாணயமாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப்பத்திரங்கள் மற்றும் ஏனைய கைமாற்றத்தகு சாசனங்கள் என்பவற்றை ஆக்குவதற்கும், வரைவதற்கும், ஏற்றுக்கொள்வதற்கும், கழிப்பனவு செய்வதற்கும், புறக்குறிப்பிடுவதற்கும், பேச்சுவார்த்தை மூலம் பெறுவதற்கும், வாங்குவதற்கும், விற்பதற்கும், வழங்குவதற்கும், வங்கிக்கணக்குகளைத் திறப்பதற்கும், தொழிற்படுத்துவதற்கும், முடிவிடுவதற்கும், பிணைப் பொறுப்புடனோ பிணைப் பொறுப்பின்றியோ பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை முகாமைப் பேரவை தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய முறையில் குறிப்பீடுசெய்வதற்கும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை எய்தப் பெறுவதற்காக எவரேனும் ஆளுடன், இலங்கையிலோ வெளிநாட்டிலோ கூட்டிணைக்கப்பெற்ற அல்லது கூட்டிணைக்கப்பெறாத ஆட்களின் குழுமத்துடன் அல்லது ஏதாவது அரசாங்கத் திணைக்களத்துடன், கூட்டுத்தாபனத்துடன், சபையுடன், மாகாண சபையுடன், உள்ளூரதிகார சபையுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளல் ;

(ஊ) வெவ்வேறு வகுதியினவான உறுப்பாண்மைகளைப் பதிவுசெய்தல் தொடர்பில் செலுத்தப்படவேண்டிய கட்டணங்களைத் தீர்மானிப்பதற்கும் ; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமிப்பதற்கும், தொழிலுக்கமர்த்துவதற்கும், பதவிவிலக்குவதற்கும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்துவதற்கும், கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும், பணிக்கொடைகளையும் அவர்களுக்குச் செலுத்துதவதற்கும்.

**கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்**

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், பணிப்பாளர் நாயகம், உபதலைவர், செயலாளர், உபசெயலாளர், பொருளாளர் மற்றும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலிருக்கும் விதிகளுக் கிணங்கத் தெரிவு செய்யப்படக்கூடிய ஏழு பேருக்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட பணிப்பாளர் சபையொன்றின் மூலம் அப்போதைக்கு வலுவிலிருக்கும் விதிகளுக்கிணங்கவும் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர் சபை இச் சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பணிப்பாளர் சபையில் உறுப்பினர்களாக பதவிதாங்கியோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் விதிகள்**

**6.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக் குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டு, உறுப் பினர்களைச் சேர்த்தல், மீளப்பெறுதல் அல்லது விலக்குதல், முகாமைச் சபையைத் தேர்ந்தெடுத்தல், கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்குநர்கள், முகவர்கள், அலுவலர்கள், சேவையாளர்கள் என்போரின் கடமைகளை நடாத்துதல், அலுவல்களைக் கொண்டு நடாத்துவதில் கூட்டுத்தாபனத்தினாலும் முகாமைச் சபையினாலும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறைகள், அத்துடன் பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்தலும் என்பவற்றுக்காக இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராக விதிகளை காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்ததாபனத்துக்குச் சட்டமுறையாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டபோது அதே போன்ற ஒரு கூட்டத்திலும் அதேபோன்ற முறையிலும் அவை மாற்றப்படலாம், திருத்தப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம் அல்லது அவற்றுக்கு எதுவும் சேர்க்கப் படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் நிதியம்**

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டி ருத்தல் வேண்டும். கொடை, விருப்பாவணம், நன்கொடை, அறுதி, சந்தாப் பணங்கள் அல்லது கட்டணங்கள் என்ற

வகையில் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் தீர்மானிக்கவேண்டியவாறான ஒரு வங்கியிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளிலோ கூட்டுத்தாபனத்தின் வரவில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுகையில் கூட்டுத்தாபனத்தால் கூறப்பட்ட ஏதேனும் செலவினை ஈடுசெய்வதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் நிதி மற்றும் ஆதனம் எந்த வகையிற் பெறப்பட்டாலும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் மாத்திரமே பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், இலாபத்தின் பகுதியாகவோ மிகையூதியம் என்ற வகையாகவோ அல்லது வேறு எவ்வகையாகவோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செலுத்தப்படுதலும் அல்லது கைமாற்றப்படுதலும் ஆகாது.

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் பேரவையினால் நியமிக்கப்பட்ட ஒரு தகைமை பெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

இப்பிரிவில், "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது -

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்த

கைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காள ரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ளவரு மான தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர் களுள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து, அத்தகைய நிறுவகத்தி னால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றித ழொன்றைக் கொண்டவராகவு முள்ள கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

கூட்டுத்தாப னத்தின் இலச்சினை

**9**. கூட்டுத்தாபனத்தின் இலட்சினையானது பணிப்பாளர் நாயகம் மற்றும் செயலாளரின் முன்னிலையின்றி, எத்தன்மை யினதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாதென்பதுடன், அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச் சாசனத்தில் தங்களது பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டு மென்பதுடன், அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாக ஒப்பமிடுவதிலிருந்து தனிவேறானதாதலும் வேண்டும்.

மன்றத்தினால் செலுத்தப்படற் பாலனவும் மன்றத்திற்கு செலுத்தப் படவுள்ளது மான கடன்கள்

**10**. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குரிய எல்லாத் கடன்களும், பொறுப்புக் களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்திகதி யன்று மன்றத்துக்கு வருமதியாகவுள்ள கடன்கள், உதவுதொகை கள், ஒப்பப்பணங்கள் ஆகியன இச்சட்டத்தின் நோக்கங்களுக் காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

**11.** ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை அல்லது இறுதிவிருப்பாவணக் கையளிப்பின்மீது அல்லது வேறுவகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை, ஒன்றில் பயன்பெறும் சொந்தக்காரராக அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளராக அல்லது வேறுவகையாக எடுக்கவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் ஆற்றலுடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் அத்துடன் தொடர்புபட்ட கையாளுகைச் சாசனத்தின் ஏற்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற, வில்லங்கத்துக்குட்படுத்த அல்லது பொறுப்பிக்கவுள்ள முழுத்தத்துவத்துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்*

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும் மற்றும் பொறுப்புக்களும் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டனவும், ஏதேனும் வருமானத்தை அல்லது இலாபத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப்பதிலிருந்து விதிகளினால் தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப்பட்டனவுமான வேறு ஏதேனும் நிறுவகத்திற்கு அல்லது வேறு எவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவகம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படுகையில் அல்லது அதற்கு நேர்முந்திய நிலையில் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*கலைக்கப்பின் போது எஞ்சியுள்ள ஆதனம்*

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும்

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்*

அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமை கோருகின்றவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

**14**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*